2014 ஆகஸ்ட் 4]

324—

கூடுதல் கட்டடம்

***30092—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் புதுப்பித்து, கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி, உசிலம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் புதுப்பிக்கவும், கூடுதல் கட்டடம் கட்டவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1985 ஆம் ஆண்டு 2 கிராமியக் கிட்டங்கிகளுடனும், ஏலக் கொட்டகையுடனும் கட்டப்பட்டது. கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கின்ற அவை பழுதடைந்த நிலையில் இருந்து வருகின்றன. இதுவரை 4,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கிகள் இருந்து வருகின்றன. மேலும், அந்தப் பகுதிக்கு இன்னும் கூடுதல் கிட்டங்கி கட்டுவதற்கு அரசு முன்வருமா? மேலும், அந்தப் பகுதியில் உலர் களம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை விற்பனைக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள உசிலம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சொந்தக் கட்டடத்தில் 7.19 ஏக்கர் பரப்பளவில் இயங்கி வருகிறது. 2013-2014 ஆம் ஆண்டில் நெல், சோளம், மக்காச்சோளம், குதிரைவாலி, பருத்தி, தேங்காய் போன்ற விளைபொருள்கள் 3,892 மெட்ரிக் டன் வரத்து பெறப்பட்டு, ரூபாய் 5,332 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. விவசாயிகளுக்காகப் பொருள் ஈட்டுக் கடனாக ரூபாய் 104.674 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட அலுவலகத்துடன்கூடிய ஏலக் கொட்டகை ஒன்றும், தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு ஊரகக் கிட்டங்கிகளும் ஏற்கெனவே உரிய முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் வாழ்கிறாரே மக்கள் திலகம் புரட்சித் தலைவர் அவர் பாடல் வரிகளிலே வருவதுபோல "நதியைப் போல நாமும் நடந்து பயன் தர வேண்டும். கடலைப் போல விரிந்த இதயம் இருந்திட வேண்டும்" என்று (மேசையைத் தட்டும் ஒலி) இரக்க சிந்தனைக்கு இலக்கணமாய், கருணைப் பார்வையோடு கடமையை உணர்ந்தவராய், ஈகை இதயம் கொண்ட இனியவராய் விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தற்போது கூடுதலாக ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கி அமைக்கப்பட்டு வருகிறது என்பதையும், மேலும், ஏற்கெனவே உள்ள கிட்டங்கிகள் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு முழுமையாக விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன என்ற விவரத்தையும், மேற்கொண்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் உலர் களம் அமைக்கப்படுமா என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு அவர் சொல்கின்ற இடத்தில் உலர் களம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லி, அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்*

அவர்களின் விரிவான பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உசிலம்பட்டி பகுதியில் பூக்கள் நிறைய விளைந்து கொண்டிருக்கின்றன. காய்கறிகள் நிறைய விளைந்து கொண்டிருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க குளிர்பதனக் கிட்டங்கிகள் (cold storage) அமைத்துத் தரப்பட வேண்டும். மேலும், அதற்கான இடங்களும் அங்கே இருக்கின்றன. குளிர் பதனக் கிட்டங்கிகள் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2012 ஆம் ஆண்டில் 11-9-2012 அன்று அரசாணை எண் 199, வேளாண்மைத் துறையின் மூலமாக 51 இடங்களில் தமிழகத்திலே ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிட்டங்கிகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்திலேயும் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று புதியதாக குளிர்பதனக் கிட்டங்கிகள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதிக்கு உட்பட்ட அரூர், மொரப்பூர் தொகுதி, கம்பைநல்லூர் பகுதி உள்ளடங்கிய, கம்பைநல்லூர் பகுதியிலே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் புதிதாக கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 21 ஒழுங்குமுறை விற்பனைக் குழுக்கள் இருக்கின்றன. 277 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஏறக்குறைய 157 இடங்களில் சொந்தக் கட்டடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. சொந்தக் கட்டடம் இல்லாத வாடகைக் இடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கிற விற்பனை மையங்களுக்கு மாண்புமிகு அம்மாவுடைய அரசு உடனடியாகக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 325, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

325—

ஸ்கேன் வசதி

***43912—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மகப்பேறு மருத்துவமனைகளுக்கும் ஸ்கேன் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி வினாக்களுக்கான விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 15 மகப்பேறு மருத்துவமனைகளில், 9 மகப்பேறு